**வரையறுத்த ரத்னா புரபேட்டி ஹோல்டிங் கம்பனி - 2021/2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த ரத்னா புரபேட்டி ஹோல்டிங் கம்பனி "கம்பனி" 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து கம்பனியின் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளினை முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக

காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் சம்பந்தமாக பார்க்கையில் அதிகாரசபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவனம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வணிக அலுவலக தொகுதியில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணிக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 12.4 மில்லியன் தொகையான பெறுமதி சேரத்தல் வரியினை மீண்டும் அறவீடு செய்யும் இயலுமை இல்லாத போதிலும் அப்பெறுமதியானது முற்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வணிக பெறவேண்டியவைகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறுமதி சேர்த்தல் வரியினை மீளச் செலுத்தும் அறிவித்தலினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததனால் நிர்மாணச் செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாடுவெளியீட்டு வரி பெரும்பாலும் ஆரம்பத்திலேயே கிடைக்காததனால் இது கிடைக்க வேண்டியதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போதும் கணக்குவைக்கும் போதும் சரியாக செய்யப்படுதல் வேண்டும். |

1.6 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 220 ஆம் பிரிவு | ஒரு கம்பனியின் தேறிய சொத்துக்களானது அக்கம்பனியின் வெளியிடப்பட்ட மூலதத்தில் சரி அரைவாசியினை விட குறைவானது எனத் தோன்றுகின்ற சந்தர்ப்பத்தில் கம்பனி அடைந்து கொள்ள கொண்டுள்ள நட்டங்களின் தன்மையும் அளவும், கம்பனி அடைந்துகொண்டுள்ள நட்டங்களுக்கான காரணம் அல்லது காரணங்கள் மற்றும் அவ்வாறான நட்டம் மேலும் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்காக அல்லது அடைந்துகொண்டுள்ள நட்டத்தை இல்லாமல் ஆக்குவதற்காக பணிப்பாளர் சபையினால் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாகவிருந்தால் அந்த நடவடிக்கை தொடர்பாக பங்குதாரர்களுக்கு தெரியப்படுத்தி பணிப்பாளர் சபையினால் ஒரு அறிக்கையினைத் தயாரித்து அந்த அறிக்கையுடன் அக்கம்பனியின் பங்குதாரர்களின் விசேட பொதுக் கூட்டம் அக்கம்பனியின் பணிப்பாளர்களால் கோரப்படுதல் வேண்டும். எனினும் கம்பனி மீளாய்வாண்டின் போது ரூபா 101.98 மில்லியன் தேறிய ஏட்டுப்பெறுமதி மறைப் பெறுமதியாக இருந்தும் மேற்கூறிய பிரமாணத்தின் பிரகாரம் ஒரு அறிக்கையினைத் தயாரிப்பதற்கு அல்லது ஒரு கூட்டத்தினை கூட்டுவதற்கேனும் இந்த அறிக்கைத் திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | RALL இன் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் RPHL இன் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களாகவும் செயற்பட்டதுடன் RALL இன் பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் போது மாத்திரமல்லாது RPHL பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் போதும் இக்கம்பனியில் காணப்பட்ட சிக்கல் நிலைமையை தீர்த்துவைப்பதற்காக எடுக்கக்கூடிய உச்ச அளவு நடவடிக்கைகள் சம்பந்தமாக தொடர்ச்சியாக விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. மேலும் இச்செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பணச் செலவுகள் சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக மேலதிக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக தடயக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு அங்கீகாரத்தினை வேண்டி அனுப்பிவைக்கப்பட்ட அமைச்ரவை விஞ்ஞாபனத்திற்கு அமைப/23/0436/603/009 ஆம் இலக்க 2023-03-14 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | அதிகாரச் சட்டத்தின ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தாய்க் கம்பனியால் தலைமை அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதியை வழங்குதல் மற்றும் உரிய காணியின் உரிமை தொடர்பாக உருவாகியிருந்த சிக்கலின் காரணமாக இதன் நிர்மாண நடவடிக்கைகள் 2015 யூலை 03 ஆந் திகதியளவில் நிறுத்தப்பட்டது. செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளை நிறுத்துகையில் தாய்க் கம்பனியால் ரூபா 828.3 மில்லியன் தொகை இச்செயற்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் கட்டிட திட்டத்தில் மாற்றம் செய்து அக்கட்டிடத்தின் கட்டமைப்பின் மீது வணிக அலுவலக கட்டிடத் தொகுதியினை நிர்மாணக்கும் புதிய செயற்திட்டம் 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டதுடன் அதற்காக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் 2021 மார்ச் 08 ஆந் திகதி ரத்னா புரஜெக்ட் ஹோல்டிங் கம்பனி தாய்க்கம்பனியின் என்ற பெயரில் இத்துணைக்கம்பனி தோற்றுவிக்கப்பட்டதுடன் இத்துணைக்கம்பனியை பதிவு செய்வதற்கு முன்னர் தாய்க் கம்பனியின் பணிப்பாளர் சபையின் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.<br>இச்செயற்திட்டத்திற்காக மொத்த மதிப்பீட தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மதிப்பீடு செய்த பெறுமதி ரூபா 5016.87 மில்லியனாகும். இதன் ஆலோசனை சேவைகக்காக ஒப்பந்த பெறுமதியில் 06 சதவீதம் அதாவது ரூபா 301.01 மில்லியனுக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இந்த நிதிப்பிரமாணங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரை இத்துணைக்கம்பனியால் ரூபா 1,326.7 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காகர்களைத் தெரிவு செய்யும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.7, 2.8 மற்றும் 3.2 ஆம் பிரிவுகளுக்கும் 2020 மார்ச் 05 ஆந் திகதிய பெறுகைகள் கையேட்டின் 35 ஆம் பிரிவிற்கும் முரணாகவும் சேவை வழிகாட்டிக் கையேட்டின் 2.10.1 மற்றும் 3 ஆம் | 2015 ஆம் ஆண்டில் இடைநடுவில் நிறுத்தப்பட்ட இச் செயற்திட்டத்தினை புதிய தோற்றத்தில் 2020 ஆம் ஆண்டில் கலப்பு அபிவிருத்தி செயற்திட்டமாக திருத்தம் செய்து மீண்டும் நிர்மாண நடவடிக்கைகளுக்கும் ஆலோசனை சேவைகளுக்குமாக மாகா இன்ஜினியரிங் தனியார் கம்பனி மற்றும் டிசைன் குரூப் பயிவ் இன்டநெசனல் தனியார் கம்பனிக்கும் அப்போதிருந்த தலைவர் உள்ளடங்கலாக முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப்புதிய செயற்திட்டத்தின் நிர்மாண கிரயம் ரூபா 5.016 பில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. புதிய கலப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தினை சமர்ப்பித்த 2021-05-17 ஆந் திகதிய MOD/CP/SMONS/69/2021 ஆம் இலக்க அமைச்ரவை விஞ்ஞாபனத்திற்கு 2021-05-24 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது அங்கீகரித்து 2021-05-25 ஆந் திகதிய 21/0912/303/069 ஆம் இலக்க அமைச்ரவை அலுவலக கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டதுடன் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் இச்செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்தினால் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. நிர்மாண நடவடிக்கைகளுக்காக பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாததுடன் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு வியாபாரத் திட்டத்துடன் சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு ஒரு | இச்செயற்திட்டம் தொடக்கத்திலிருந்து இன்றுவரை மேற்கொண்டுள்ள சட்டரீதியற்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்தியாயங்களுக்கு முரணாகவும் முறையே ஒப்பந்தகாரர்களும் ஆலோசனைக் கம்பனிகளும் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் நிதியை வழங்கும் சிக்கலின் அடிப்படையில் 2022 யூலை மாதத்திலிருந்து இந்த அறிக்கைத் திகதி வரை அதன் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன | அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2022 திசெம்பர் 12 ஆந் திகதி வரை இந்த நிர்மாணங்கள் தொடர்பாக செய்த வேலைகளின் பெறுமதி ரூபா 1127.39 மில்லியன் தொகையான 13 விலைபபட்டியல்களை ஆலோசனை சேவை கம்பனி சான்றுபடுத்தியிருந்தும் தாமதக்கட்டணம், செயற்திட்டத்தை நிறுத்திவைத்தலுக்காக செலுத்த வேண்டியுள்ள மேலதிக செலவுகள், அத்தியவசிய செலவு நட்டம் மற்றும் இலாபம் இழக்கப்படுதல் முதலியவாறாக மொத்தமாக ரூபா 1,432.36 மில்லியனுக்காக ஒப்பந்த கம்பனியால் உரிமை கோரப்பட்டுள்ளதுடன் அதற்காக ஆலோசனை சேவை கம்பனியின் இணக்கப்பாடு கிடைத்துள்ளது என உறுதிப்படுத்தப்படவில்லை. அத்திகதியில் ஆலோசனை சேவை கம்பனியும் ரூபா 88.46 மில்லியன் பெறுமதியான ஆலோசனை சேவைக்கான விலைப்பட்டியல்களை கம்பனிக்குச் சமர்ப்பித்திருந்தது. கம்பனியிடம் நிதி இல்லாமையின் அடிப்படையில் கம்பனியால் மேற்கொண்ட விண்ணப்பங்களுக்கு இணங்க ஒப்பந்த கம்பனிக்கும் ஆலோசனை கம்பனிக்கும் செலுத்த வேண்டியுள்ள மிகுதிப்பணத்தைப் பெற்றுக்கொள்ளாமைக்கும் செலுத்தாமைக்கும் இரு தரப்பினர்களும் இணங்கிக் கொண்டிருந்தனர். இந்நிலைமையினை கருத்தில் கொண்டு 2023 மார்ச் 14 ஆந் திகதிய அமைச்ரவை தீர்மானத்தின் மூலம் இந்த நிர்மாணச் செயற்திட்டத்திற்குப் பதிலாக மிகவும் பொருத்தமான கலப்பு அபிவிருத்தி செயற்திட்டமாக இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து முறையான நடைமுறையினைப் பின்பற்றி பொருத்தமான உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்களை அடையாளங்காணுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் இந்த அறிகைத் திகதி வரை அந்த விடயம் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | 2021-12-28 ஆந் திகதிய SMONS/NS/RALL/CORPORATE TOWER ஆம் இலக்க பாதுகாப்பு செயலாளரின கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடிதத்தின் மூலம் செயற்திட்டம் தொடர்பாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் அமைச்சின் எழுத்துமூல முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமை இச்செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை ஆரம்பிப்பதற்கு ஆயத்தங்களை மேற்கொண்ட அப்போதிருந்த தலைவர் உட்பட முகாமைத்துவ சபையின் தீர்மானம் வெற்றியளிக்காமைக்கு தாக்கமளித்துள்ள காரணங்கள் உள்ளடங்கலாக ஏனைய சிக்கல் நிலைமையை ஆராய்ந்து பார்ப்பதற்கு 2023 ஒக்தோபர் 30 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது அமைச்சு அங்கீகாரத்தின் அடிப்படையில் முழுமையான அதிகாரத்துடன் சுயாதீனமாக ஒரு குழுவினை நியமித்து முறையான பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நபர்களை அதன் மூலம் அடையாளங்கண்டு தேவையான மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க செயற்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு இக்கம்பனிக்கு நிதி இயலுமை இல்லாததனால் பொருத்தமான உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்களை அடையாளங்கண்டு செயற்திட்டத்தினை ஒப்படைப்பதற்கு தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தினைப் | அமைச்ரவை தீர்மானத்தின் பிரகாரம் துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பெற்றுக்கொள்ளாமை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையுடன் நடைபெற்ற கலந்துலைரயாடலின் போது இச்செயற்திட்டத்திற்காக புதிய முதலீட்டாளரினை தேடிக்கண்டு பிடிப்பது சம்பந்தமாக தரப்பினர்களின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் இச்செயற்திட்டத்திற்காக காணப்படுகின்ற BOI அங்கீகாரமானது எந்தவொரு முதலீட்டாளரும் செயற்திட்டத்திற்காக தேடிக்கண்டுபிடிக்கப்பட்டிருக்குமாயின் அவர்களிடம் ஒப்படைப்பதற்கும் BOI இணங்கி கொள்ளப்பட்டிருந்தது. UDA இனாலும் வருடாந்தம் நிலத்திற்காக அறவிடப்படுகின்ற தவணைப் பணத்தை ஒரு முதலீட்டாளரினை தேடிக்கண்டு பிடிக்கும் வரை அறவீடு செய்யாமல் இருப்பதற்கும் மேற்கூறிய கலந்துரையாடலின் போது இணங்கிக் கொள்ளப்பட்டிருந்தது.